**செய்தி வெளியீடு எண்: 120** **நாள்: 12.02.2020**

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், மதுரமங்கலம், கண்ணன்தாங்கல் கிராமத்தில் நிறுவப்பட்டுள்ள CEAT நிறுவனத்தின் ரேடியல் டயர் உற்பத்தி தொழிற்சாலையை திறந்து வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை – 12.2.2020

**மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.**

இன்று நான் துவக்கி வைத்துள்ள இந்தத் தொழிற்சாலைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், 2018ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் தேதி எனது முன்னிலையில் போடப்பட்டது. ஒப்பந்தம் போடப்பட்டு பதினெட்டே மாதங்களில், உத்தரவாதம் அளித்த மொத்த முதலீடான 4,000 கோடி ரூபாயில், முதல்கட்டமாக, 1,400 கோடி ரூபாயை முதலீடு செய்து, இன்று முழு அளவிலான வணிக உற்பத்தியை துவக்கியுள்ளது சியட் நிறுவனம். மிக விரைவாக செயல்பட்டு, தனது உற்பத்தியை துவக்கியுள்ள இந்த நிறுவனத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்பான திறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பான கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்
**திரு. எம்.சி. சம்பத்** அவர்களே!

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்
**திரு. பா. பெஞ்சமின்** அவர்களே!

தொழில் துறை முதன்மைச் செயலாளர்
**திரு நா.முருகானந்தம்** அவர்களே!

சியட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்
**திரு. ஆனந்த் கோயங்கா** அவர்களே!

நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற சட்டப்பேரவை உறுப்பினர் திரு.பழனி அவர்களே!

முன்னாள் அமைச்சர் திரு.சோமசுந்தரம் அவர்களே!

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.சிட்லபாக்கம் ராஜேந்திரன் அவர்களே!

திரு.காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களே!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வாலாஜாபாத் கணேசன் அவர்களே!

திரு.ஆறுமுகம் அவர்களே!

சியட் நிறுவனத்தின் பங்குதாரர்களே,

நிறுவனத்தின் பணியாளர்களே,

பெரியோர்களே, தாய்மார்களே,

பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் வணக்கம்.

வாகன உற்பத்தியில் இந்தியாவின் தலைமையகமாக விளங்கும் தமிழ்நாடு, டயர் உற்பத்தியிலும் முதலிடம் பெற்றுள்ளது. அப்பல்லோ, ஜே.கே., மிஷ்லின், எம்.ஆர்.எப். (MRF), டி.வி.எஸ். (TVS), யோகோ ஹாமா (YOKO HAMA) என, திருவள்ளூர் முதல் திருநெல்வேலி வரை, பல டயர் உற்பத்தி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இருசக்கர வாகனங்கள் முதல் போர் விமானங்கள் வரை அனைத்து வகை பயன்பாட்டிற்குமான டயர்களும் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே பகிர்ந்து கொள்கின்றேன். இந்தியாவின் 40 சதவீத டயர் உற்பத்தி தமிழ்நாட்டில் தான் மேற்கொள்ளப்படுகிறது. இந்த மணிமகுடத்தில், மேலும் ஒரு மாணிக்கமாக இந்தத் தொழிற்சாலை அமைந்திருப்பதை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

- ✓ தரமான சாலைகள் மற்றும் துறைமுகங்கள் என சிறப்பான உட்கட்டமைப்பு,
- ✓ தடையில்லா மின்சாரம்,
- ✓ திறன் மிக்க மனிதவளம்,
- ✓ பல முன்னணி வாகன உற்பத்தி நிறுவனங்கள் அருகே அமைந்துள்ளதால் கிடைக்கும் சிறந்த சந்தை வாய்ப்பு,
- ✓ பொருளாதார உயர்வால் உள்ள சிறப்பான வாகன நுகர்வு மற்றும்
- ✓ சிறப்பான சரக்கு போக்குவரத்து கட்டமைப்பு காரணமாக அதிக அளவில் உள்ள இரண்டாம் கட்ட சந்தை வாய்ப்பு என,

ஒரு டயர் உற்பத்தி தொழிற்சாலையின் சிறப்பான வெற்றிக்குத் தேவையான அனைத்தும் தமிழ்நாட்டில் அமைந்துள்ளன.

மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய தொழிற்சாலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றால், அதன் சிறப்பான நிர்வாகத் திறனும், எங்களுடைய அரசு வழங்கிய ஒத்துழைப்புமே காரணம்.

சியட் நிறுவனத்தின் தொழிற்சாலைக்கு ஒற்றைச் சாளர முறை மூலம் அனைத்து அனுமதிகளும் விரைவாக வழங்க தமிழ்நாடு அரசின் தொழில் துறை அனைத்து ஒத்துழைப்பையும் வழங்கி வருகிறது. பெருந்தொழில் முதலீட்டுத் திட்டங்களை ஆய்வு செய்து அவற்றுக்கான அனுமதிகளை உடனுக்குடன் வழங்கிட, எனது தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. **13.1.2020** அன்று நடைபெற்ற இக்குழுவின் கூட்டத்தில், சியட் நிறுவனம் கொண்டு வந்துள்ள இத்திட்டத்தின் முன்னேற்றம் ஆய்வு செய்யப்பட்டு, இந்நிறுவனத்தை இயக்குவதற்கான இசைவாணை உடனடியாக வழங்கப்பட்டது.

சியட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் தான் தமிழ்நாட்டில் தொழில் துவங்க வரும் அனைத்து திட்டங்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் பெருமையுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் பச்சை வகைப்பாடு என்று வகைப்படுத்தப்பட்டுள்ள தொழிற்சாலைகள், தொழில் துவங்குவதற்கான நடைமுறைகள் எளிமை ஆக்கப்பட்டுள்ளது மட்டும் அல்லாமல், அதிக வேலைவாய்ப்பு வழங்கும் தொழிற்சாலைகளை ஊக்குவிக்க, சிறப்பான சலுகைகளை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கி வருகிறது.

பல்வேறு காரணங்களால் இயக்கப்படாமல் நின்ற நிறுவனங்கள் கூட, மாண்புமிகு அம்மா அரசின் சிறப்பான செயல்படுகளால் புத்துயிர் பெறும் சூழல் உருவாகி இன்றைக்கு திறக்கப்பட்டு வருகின்றன.

தற்போது டயர் நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான முக்கிய மூலப்பொருட்களில் ஒன்றான சிந்தடிக் ரப்பரை (Synthetic Rubber) மலேசியா போன்ற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன. பெட்ரோகெமிக்கல் ஆலைகள் தமிழ்நாட்டில் உருவாவதன் மூலம், டயர் நிறுவனங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் குறைவான விலையில் இங்கேயே கிடைக்கக்கூடிய நல்ல சூழல் உருவாகும். இதனால், உற்பத்தி செலவு குறைவதோடு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும்.

தொலைநோக்குப் பார்வையுடன் மாண்புமிகு அம்மாவின் அரசு எடுத்துவரும் இது போன்ற நடவடிக்கைகளால், ஆடை உற்பத்தி முதல் மருத்துவ உபகரணங்கள், மோட்டார் வாகன உதிரி பாகங்கள் என பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய

சூழல் மாறி, வணிகச் சங்கிலியின் அனைத்து படிநிலைகளும் தமிழ்நாட்டிலேயே அமையும் சூழல் ஏற்பட்டு, ஏராளமான குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை இன்றைக்கு தமிழகம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

ஆசியாவிலேயே முதலீடுகளை ஈர்க்கும் மாபெரும் சக்திகளில் ஒரு மாநிலம் என்று சொன்னால், தமிழ்நாடு தான் என்று இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகின்றேன்.

சில மாநிலங்கள் சமூக வளர்ச்சிக் குறியீடுகளில் முன்னிலை வகிக்கின்றன. சில மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சியில் முன்னிலை வகிக்கின்றன. ஆனால், சமூக மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி என துறைகள்தோறும் சிறப்பிடம் பெற்று, அனைவருக்குமான வளர்ச்சியை தொடர்ந்து உறுதி செய்யும் ஒரே மாநிலம் தமிழ்நாடு என்று இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவிக்க விரும்புகிறேன்.

I congratulate Mr. Anant Goenka and his team for implementing this project within a short span of 18 months. This goes to show the efficiency of CEAT and a committed facilitation support provided by Government of Tamil Nadu. I wish everyone in CEAT all the very best. I also request Mr. Anant Goenka to start a major R & D facility in Tamil Nadu.

சியட் நிறுவனம், தனது உற்பத்தி தொழிற்சாலையை துவங்கியதைப் போல, விரைவில் தனது ஆராய்ச்சி பிரிவையும் சென்னையில் துவங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிகழ்ச்சியிலே நான் திரு.ஆனந்த் கோயங்கா அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது, இன்று உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கின்றது என்றும், நாள் ஒன்றுக்கு 30,000 கார் டயர் உற்பத்தி செய்யப்படும் என்றும் சொன்னார். அதோடு, இங்கு பணிபுரிகின்றவர்களில் 40 சதவீதம் பெண்கள் என்ற செய்தியையும் சொன்னார், உண்மையிலேயே பாராட்டுக்குரியது. ஆகவே, ஒரு சிறப்பான தொழிற்சாலை இங்கே அமைந்திருக்கின்றது. உங்கள் தொழிற்சாலைக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பையும் தமிழ்நாடு அரசு வழங்கும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அதுமட்டுமல்ல, இந்தத் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீர் கொண்டு வருவதற்கான உதவியை செய்ய வேண்டுமென்று இங்கே மேடையில் என்னை கேட்டுக் கொண்டார். இந்தத் தொழிற்சாலைக்குத்

தேவையான தண்ணீர் கொண்டு வருவதற்கு எங்களுடைய அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, தமிழ்நாட்டில் தொழில் துவங்கக்கூடிய அனைத்து தொழிற்சாலைகளுக்கும் எங்களுடைய அரசு முன்னிருந்து அனைத்து ஒத்துழைப்பையும் நல்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சிறப்பான துவக்கம் அதற்கு அடித்தளமாக அமையும் என்று வாழ்த்தி, இந்த சியட் நிறுவனம் மென்மேலும் வளர்ந்து பலருக்கு வேலைவாய்ப்பை வழங்கி, செழித்து, ஓங்கி வளர வேண்டும் என்று வாழ்த்தி, வாய்ப்பிற்கு நன்றியைக் கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**